# <u>சுருக்கம்</u>

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை – தமிழ்நாடு சீர்மரபினர் நல வாரியம் – பல்வேறு நல உதவிகள் – செயல்படுத்துவதற்கான வழிகாட்டி நெறிகள்– ஆணை வெளியிடப்படுகிறது.

---

அரசு ஆணை ( நிலை ) எண். 90 நாள்: 12.08.2008

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 13, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 20.4.2007.
2. அரசாணை (நிலை) எண். 29, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 28.3.2008.

* * * * * *

**<u>ஆணை:</u>**

அரசாணை (நிலை) எண். 13, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 20.4.2007–ன்படி சீர்மரபினர் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென சீர்மரபினர் நல வாரியம் அமைக்கப்பட்டது. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும், திரு. பெ. மின்னல்கொடி அவர்களைத் துணைத் தலைவராகவும், அரசு சார் உறுப்பினர்களாக 7 பேர்களும், அலுவல் சாரா உறுப்பினர்களாக 13 பேர்களையும் கொண்டு சீர்மரபினர் நல வாரியம் இயங்கி வருகிறது.

2. அரசாணை (நிலை) எண். 29, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 28.3.2008–ன்படி சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு, அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகளும் வழங்குவதற்கான வழிமுறைகள் குறித்த அரசாணை வெளியிடப்பட்டது.

3. அதன்படி சீர்மரபினர் நலவாரியத்தில் உறுப்பினர்கள் பதிவு செய்வது, நலத்திட்ட உதவிகளுக்காக விண்ணப்ப படிவங்கள், விண்ணப்பிக்கும் முறை குறித்த வழிமுறைகள் தொகுப்பினை இணைப்பில் கண்டுள்ளவாறு அரசு வெளியிடுகிறது.

4. இவ்வழிமுறைகள் தொகுப்பினை அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கும் அனுப்பி, வாரியத்தில் உறுப்பினர்களை பதிவு செய்து, நலத்திட்ட உதவிகள் வழங்கும் பணியினை முனைப்புடன் செயல்படுத்தி 15 தினங்களுக்கு ஒரு முறை நல வாரிய உதவிகள் வழங்கியமை குறித்த காலமுறை அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந. வாசுதேவன்,
அரசுச் செயலாளர்

<u>பெறுநர்:</u>
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர்,
சென்னை –5.
சீர்மரபினர் நலவாரியத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும்
(உறுப்பினர்–செயலர் மூலமாக).
<u>நகல்:</u>
பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சர் அலுவலகம்,
சென்னை –9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.